# பகுதி IV

# பகுதி IV

## 2017 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்

பக்கம்


1. 2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் 1

2. 2017ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டம் 12

3. 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம் 18

# 2017ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

[2017ஆம் ஆண்டு யூலை மாதம் 28ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**வெளிநாட்டுச் செலாவணியை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; வெளிநாட்டுச் செலாவணியை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான பொறுப்பை அரசாங்கத்தின் முகவரென்ற முறையில் மத்திய வங்கிக்கு உரித்தாக்குவதற்கும்; (423ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) மத்திய வங்கியானது, அரசாங்கத்தின் முகவரென்றமுறையில், இப்பிரிவின் கீழ் அதற்கென காலத்துக்குக்காலம் வழங்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியின் முறையான மேம்படுத்துகையையும் ஒழுங்குபடுத்துகையையும் உறுதிப்படுத்துவதற்கென இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், காலத்துக்குக் காலம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை வழங்கலாமென்பதுடன், இப்பணிப்புகள் நிறைவேற்றப்படுவதனைச் செய்விப்பது பணச்சபையின் கடமையாதலும் வேண்டும்.

3. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி மத்திய வங்கியினால் பிரயோகிக்கப்படுவதற்கு, புரியப்படுவதற்கு அல்லது நிறைவேற்றப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுமிடத்து அல்லது தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணி, மத்திய வங்கியின் ஆளுநரினது பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவராகப் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரினால் அல்லது அவரது சார்பில் அவரது உதவியாளராகப் பெயர் குறிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரினால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

4. (1) (அ) உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு வர்த்தக வங்கியும், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் வங்கித்தொழில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தகைய வங்கிக்கு உரிமமொன்று வழங்கப்படுவதன் மேல் உடனடியாக, வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய செயலாற்றுவதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நியமிக்கப்பட்ட தேதியன்று வங்கித்தொழில் அலுவல்களைக் கொண்டுநடாத்துகின்ற ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும், 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராகச் செயலாற்றுவதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு விசேடித்த வங்கியும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் வங்கித்தொழில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தகைய வங்கிக்கு உரிமமொன்று வழங்கப்படுவதன்மேல் உடனடியாக, அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படலாம்.

(ஈ) நியமிக்கப்பட்ட தேதியன்று வங்கித்தொழில் அலுவல்களைக் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியும், 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) (அ) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக இராதவரும் (இதனகத்துப்பின்னர் "மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" ஒருவரெனக் குறிப்பீடு செய்யப்படுபவருமான) எவரேனுமாளை அல்லது வகுப்பினரான அல்லது வகுப்புக்களினரான ஆட்களை, 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அதற்கென மத்திய வங்கியினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மத்திய வங்கியினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு மத்திய வங்கி அனுமதிக்கலாம்.

(ஆ) நியமிக்கப்பட்ட தேதியன்று வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு அனுமதிக்கப்படுகின்ற, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அல்லது விசேடித்த வங்கிகள் தவிர்ந்த பணம் மாற்றுநர்கள் அல்லது வேறெவரேனும் ஆளுட்பட வெளிநாட்டுச் செலாவணியிலான ஒவ்வொரு வியாபாரியும், 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவராகச் செயலாற்றுவதற்கு மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) மத்திய வங்கியானது, 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான குறித்த நோக்கங்களுக்காக, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவராகவிராத எவரேனுமாட்களுக்கு விசேட அனுமதி வழங்கலாம்.

(3) இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிர, இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள ஆளெவரும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவரினூடாகவன்றி வேறுவகையாக அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட

அளவுக்கு, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரினூடாக, இலங்கையினுள்ளான இலங்கை ரூபாக்களை அல்லது சொத்துக்களை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதனை உட்படுத்துகின்ற ஏதேனும் செயலின் மூலம், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுதல் வேண்டும்.

5. (அ) இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிக் கணக்கொன்றில் வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருக்கின்றவரான் அல்லது

(ஆ) ஏதேனும் வெளிநாட்டுச் சொத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்றவரான,

இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள எவரேனுமாள், அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியை அல்லது வெளிநாட்டுச் சொத்தை, இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, அத்தகைய ஆளின் ஏதேனும் நடப்பு அல்லது மூலதனக் கொடுக்கல் வாங்கலுக்கான ஏதேனும் கொடுப்பனவைச் செய்வதற்காக அல்லது அது தொடர்பில் பயன்படுத்தலாம். இலங்கையினுள் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் கொடுப்பனவு, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவரினுடாக அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரினூடாகச் செய்யப்படுதல் வேண்டும்.

6. (1) ஆளொருவர், அத்தகைய ஆளின் நடப்புக் கொடுக்கல்வாங்கலுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவரினூடாக அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு, மட்டுப்படுத்தப்பட்டவொரு வியாபாரியினூடாக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்

(2) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவர், ஒரு முதல்வராக அல்லது இடையீட்டாளராக நடப்புக் கொடுக்கல்வாங்கலொன்றுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் நடப்புக் கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்காக வெளிநாட்டு நாணயத்தைக் கையாளுமுன்னர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவர், அத்தகைய கொடுக்கல்வாங்கலுக்காக வெளிநாட்டுச் செலாவணி தேவையாகவுள்ள ஆளை, தேவைப்பாடானது ஒரு நடப்புக் கொடுக்கல்வாங்கல் தொடர்பாகவுள்ளது மற்றும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்துகின்ற வேறெவையேனும் சட்டங்களுக்கு இசைந்தொழுகவுள்ளது என தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்கென, நியாயமான முறையில் அவசியமாகவுள்ளவாறான அத்தகைய தகவல்களை வழங்கும்படி அல்லது அத்தகைய ஆவணங்களைக் காண்பிக்கும்படி அல்லது அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்யும்படி கோருதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான நடப்புக் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தகவல்களுக்கான, ஆவணங்களுக்கான அல்லது வெளிப்படுத்துகைக்கான கோரிக்கை இணங்கியொழுகப்படாதவிடத்து அல்லது தேவைப்பாடானது ஒரு நடப்புக் கொடுக்கல்வாங்கலுக்கானதல்ல அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்துகின்ற வேறெவையேனும் சட்டங்களுக்கு இசைந்தொழுகுவதல்லதென அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர் திருப்திப்படுமிடத்து, இவ்வியாபாரி அத்தகைய நடப்புக் கொடுக்கல்வாங்கலொன்றுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு மறுத்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் கீழான நடப்புக் கொடுக்கல்வாங்கலொன்றுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு மறுக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வெளிநாட்டுச் செலாவணித் தேவையாகவுள்ள ஆளினால் கோரப்படின், தமது முடிபை அதற்கான காரணங்களுடன் சேர்த்து எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபு அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மத்திய வங்கிக்கு மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், மத்திய வங்கியானது அத்தகைய ஆளுக்கும் வியாபாரிக்கும் கேட்கப்படுவதற்கு நியாயமான சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், அத்தகைய முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

7. (1) அமைச்சர், பணச்சபையின் கலந்தாலோசனையுடனும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் இப்பிரிவின் நோக்கத்துக்காக ளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கு அல்லது வகுப்புகளுக்கு ஒழுங்குவிதிகளின் மூலம் அதிகாரமளித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதிகளை ஆக்குவதில், அமைச்சர் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) சர்வதேச நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான எந்தப் பொருத்தனைக்கு அல்லது உடன்படிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கையொப்பமிடுநரொருவராக உள்ளதோ அந்த ஏதேனும் பொருத்தனைக்கு அல்லது உடன்படிக்கைக்கு இசைந்தொழுக ஒழுங்குபடுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

(ஆ) இலங்கையின் பணக்கொள்கை மீது அத்தகைய அதிகாரவளிப்பின் தாக்கமும் அதன் நிலையுறுதிப்பாடும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்காக அல்லது வகுப்புக்களுக்காக எந்த எல்லை வரை மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் அதிகாரமளிக்கப்படலாமென்பதையும் அந்த வெளிநாட்டுச் செலாவணி எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய கையாளப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகளையும் குறித்துரைக்கலாம்.

(4) ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவொரு வகுப்பினதான அல்லது வகுப்பினவான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களாகவுள்ளவையும் அத்தகைய ஆளின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலானவையுமான வெளிநாட்டுச் செலாவணியை, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினுடாகக் கையாளுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட

ஒழுங்குவிதிகளின்மூலம் அதிகாரமளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலொன்றாகவுள்ள மூலதனக் கொடுக்கல்வாங்கலொன்றுக்காக ஒரு முதல்வராக அல்லது இடையீட்டாளராக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளலாம்.

(6) இப்பிரிவின்கீழான மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு முன்னர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, அத்தகைய கொடுக்கல்வாங்கலுக்காக வெளிநாட்டுச் செலாவணி தேவையாகவுள்ள ஆளை, அத்தேவைப்பாடு (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவொரு மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பானதாகவுள்ளதெனவும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்துகின்ற வேறெவையேனும் சட்டங்களுக்கு இசைந்தொழுகவுள்ளதெனவும் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு நியாயமான முறையில் அவசியமாகவுள்ளவாறான அத்தகைய தகவல்களை வழங்கும்படி அல்லது அத்தகைய ஆவணங்களைக் காண்பிக்கும்படி அல்லது அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்யும்படி கோருதல் வேண்டும்.

(7) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவர், தகவல்கள், ஆவணங்கள் அல்லது ஒரு வெளிப்படுத்துகைக்கான கோரிக்கையுடன் இணங்கியொழுகப்படாதவிடத்து அல்லது தேவைப்பாடானது (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கலொன்றுக்கானதல்ல அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கலை ஒழுங்குபடுத்துகின்ற வேறு சட்டங்களுக்கு இசைந்தொழுகுவதல்லதென அவ்வியாபாரி திருப்திப்படுமிடத்து, இப்பிரிவின் கீழான மூலதனக் கொடுக்கல்வாங்கலொன்றுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு மறுத்தல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழான மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு மறுக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர், 2006ஆம் ஆண்டின் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுகின்ற ஆளினால் கோரப்படின், அதற்கான காரணங்களுடன் சேர்த்து எழுத்தில் தமது முடிபை அறிவித்தல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவரின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபு அத்தகைய ஆளுக்கு அறிவிக்கப்பட்டபின்னர் பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மத்திய வங்கிக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், மத்திய வங்கியானது, அத்தகைய ஆளுக்கும் வியாபாரிக்கும் கேட்கப்படுவதற்கு நியாயமான சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், அத்தகைய முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(10) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் அதிகாரமளிக்கப்படாதவொரு மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்காக, மத்திய வங்கியானது எவையேனும் விதிவிலக்கான சூழ்நிலைகள் உள்ளமையைக் கவனத்துட்கொண்டு (1)ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரங்களுக்கு இசைந்தொழுக அமைச்சரினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்காக அங்கீகாரம் அளித்திருந்தாலொழிய, வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுதலாகாது.

8. (1) இலங்கையிலுள்ள, அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள ஆளொருவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகவும், அத்தகைய எல்லைகள் வரையும், அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமையவும் மட்டுமே-

(அ) ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை அல்லது இலங்கை நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தல் வேண்டும் அல்லது இலங்கையினுள் இறக்குமதிசெய்தல் வேண்டும்

(ஆ) அவரது உடைமையில் அல்லது இலங்கையிலுள்ள ஒரு வங்கியில் வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருத்தல் வேண்டும்.

(2) இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபவராகவுள்ள ஆளொருவர், இலங்கை நாணயத்தை மாற்றுவதிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலிருந்தான அல்லது இலங்கையினுள் சொத்தொன்றைக் கையாளுவதிலிருந்தான அல்லது மாற்றுவதிலிருந்தான அல்லது இலங்கையில் அல்லது இலங்கையிருந்தான ஏதேனும் சேவையை வழங்குவதிலிருந்தான வெளிநாட்டுச் சொத்தொன்றை, அதற்கென ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகவும், அத்தகைய வரையறைகள் வரையும் அத்துடன் அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமையவும் மட்டுமே கொள்ளுதல் வேண்டும்.

(3) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு வெளிப்படுத்தப்படாததும், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச்சட்டத்தின்கீழான, 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின்கீழான அல்லது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின்கீழ் அது தொடர்பில் ஒரு சட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதுள்ளதும் அல்லது ஒரு சட்ட நீதிமன்றத்தினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டிராததுமான ஆதனமாகவிராததும், 5ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (எ) ஆம் மற்றும் (ஏ) ஆம் விடயங்களின் கீழ் அடங்காததுமான ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு அனுப்புகின்ற இலங்கையில் வதிபவராகவுள்ள எவரேனும் இலங்கைப் பிரசை, ஒரு சதவீதத்தில் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதொகைக் கட்டணமொன்றை மட்டுமே செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன், வேறேதேனும் கட்டணத்தை, வரியை, மிகைக்கட்டணத்தை, அறவீட்டை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு அமைந்தவராதலுமாகாது:

ஆயின், இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டதும், ஒரு மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலர்களின் பெறுமதியை விஞ்சாததுமான வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்கு அனுப்புகின்ற அத்தகைய எவரேனுமாள், அனுப்புதொகைக் கட்டணத்தை அல்லது வேறேதேனும் வரியை, மிகைக்கட்டணத்தை, அறவீட்டை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது என்பதுடன், அத்தகைய பெறுமதியை விஞ்சுகின்றதாக அனுப்பப்பட்ட ஏதேனும் தொகை, (3)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அனுப்புதொகைக் கட்டணத்துக்கு உட்பட்டதாதலும் வேண்டும்:

ஆயின், மேலும் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டதும், ஒரு மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலர்களின் பெறுமதியை விஞ்சுகின்றதுமான வெளிநாட்டுச் செலாவணித் தொகையொன்றை இலங்கைக்கு அனுப்புகின்றவரும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அபிவிருத்தி முறியொன்றில் முதலீடுசெய்கின்றவருமான அத்தகைய எவரேனுமாள், அனுப்புதொகைக் கட்டணத்தை அல்லது

வேறேதேனும் வரியை, மிகைக்கட்டணத்தை, அறவீட்டை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

(4) இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டதும், (3)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இலங்கைக்கு அனுப்பப்பட்டதுமான வெளிநாட்டுச் செலாவணி ஒரு வெளிநாட்டு நாணயக்கணக்கில் வைத்திருக்கப்படலாம் அல்லது இலங்கை ரூபாக்களாக மாற்றப்படலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், மத்திய வங்கியின் அனுமதியின்றி அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டிருப்பினுங் கூட, 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூயதாக்கல் சட்டத்தின் கீழான தவறொன்றைப்புரிந்தமை மூலம் பெறப்பட்ட ஆதனமாகக் கருதப்படுதலாகாது.

(6) எட்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எவரேனுமாளினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நிதிகளை இலங்கையிலிருந்து திருப்பியனுப்புவதன்மீது மட்டுப்பாடெதுவும் இருத்தலாகாது.

9\. (1) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், அமைச்சருக்கு அறிவிப்பதற்கமைய, நடப்புக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளுக்கும் வழிகாட்டு நெறிகளையும் பணிப்புகளையும் வழங்கலாம்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளுக்கும் வழிகாட்டு நெறிகளையும் பணிப்புகளையும் வழங்கலாம்.

(3) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, வெளிநாட்டுச் செலாவணி தொடர்பாக (1)ஆம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளுக்கும் வழிகாட்டு நெறிகளையும் பணிப்புகளையும் வழங்கலாம்.

(4) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, 4ஆம் பிரிவின் (2).ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு அனுமதிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாக இராத எவரேனுமாளுக்கு அல்லது வகுப்பினரான அல்லது வகுப்பினர்களான ஆட்களுக்கு வழிகாட்டு நெறிகளையும் பணிப்புகளையும் வழங்கலாம்.

(5) மத்திய வங்கியானது, புள்ளிவிபரம்சார் மற்றும் கண் காணிப்பு நோக்கங்களுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவரை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரை, கோரிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், அத்தகைய வியாபாரிக்கு அத்தகைய கோரிக்கை அறிவிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னரான ஆறாண்டுகாலப் பகுதியின்போது அத்தகைய வியாபாரி ஈடுபட்டிருந்த ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக அத்தகைய படிவத்திலும் முறையிலுமான அத்தகைய தகவல்களை அல்லது விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவும்படி கோரலாம்.

10\. (1) மத்திய வங்கியானது, எந்நேரத்திலும், விடயத்துக்கேற்ப, எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் அல்லது வேறெவரேனுமாளின் அல்லது வகுப்பினரான அல்லது வகுப்பினர்களான ஆட்களின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களும் அல்லது வெளிநாட்டுச் சொத்துக்களும் பற்றிய புலனாய்வொன்று, (இதனகத்துப்பின்னர் “அதிகாரமளிக்கப்பட்ட ஆள்” ஒருவர் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மத்திய வங்கியினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவலரொருவரினால் நடாத்தப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றைச் செய்தல் ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினதும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினதும் அல்லது வேறெவரேனுமாளினதும், வகுப்பினரான அல்லது வகுப்பினர்களினரான ஆட்களினதும் கடமையாதல் வேண்டும்:-

(அ) அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரை எவையேனும் வளவுகளினுட் பிரவேசிப்பதற்கு அனுமதியளித்தல்

(ஆ) அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் புலனாய்வு செய்யப்படுவதற்குத் தேவைப்படக் கூடியவாறான எவையேனும் புத்தகங்களை அல்லது வேறு ஆவணங்களைக் காண்பித்தல்

(இ) அத்தகைய புத்தகங்களையும் வேறு ஆவணங்களையும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கு வைத்திருப்பதற்கு அல்லது பிரதிகளை அல்லது பிரித்தெடுத்தபகுதிகளை எடுப்பதற்கு அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அனுமதியளித்தல்

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் முன்னர் தோன்றும்படி அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்தல்

(உ) சொல்லப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள்ளும் அத்தகைய முறையிலும் புலனாய்வு தொடர்பான அத்தகைய கூற்றை அல்லது தகவல்களைக் கொடுத்துதவுதல் அல்லது

(ஊ) அத்தகைய வியாபாரியின் அறிவுக்கெட்டியவரை பொய்யானதாகவுள்ள தகவல்களை இப்பிரிவின்கீழ் கொடுத்துதவாதிருத்தல்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் (2) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தை வைத்திருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் எந்த ஆளின் கட்டுக்காப்பிலிருந்து அல்லது கட்டுப்பாட்டிலிருந்து தடுத்துவைத்தலுக்காக எடுக்கப்பட்டதோ அத்தகைய ஆளுக்கு, அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் எந்த ஆளின் கட்டுக்காப்பிலிருந்து அல்லது கட்டுக்காப்பிலிருந்து எடுக்கப்பட்டதோ அந்த ஆளினால் பிரதியொன்றுக்கான கோரிக்கை செய்யப்படின், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் சான்றுபடுத்தப்பட்ட அத்தகைய புத்தகத்தின் அல்லது ஆவணத்தின் பிரதியொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், மூலப்புத்தகங்களை அல்லது ஆவணங்களை வைத்திருக்காமல், அத்தகைய புத்தகங்களின் அல்லது ஆவணங்களின் உண்மைப்பிரதிகளைக் கொடுத்துதவும்படி அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

(4) அதிகாரமளிக்கப்பட்ட ஆளின்முன்னர் தோன்றுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவர் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவர் அல்லது வேறு ஆள், வாய்மொழிமூலம் விசாரிக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய வியாபாரியினால் அல்லது ஆளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்று எழுத்தில் வடிக்கப்படுதலும் வேண்டும் அத்துடன் அது வியாபாரியினால் அல்லது

அதனை அளிக்கின்ற ஆளினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழான புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக, மத்திய வங்கி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், சூழ்நிலைகள் தேவைப்படுத்தினால், அவ்வுரிமையைப் பிரயோகிப்பதில் ஒழுங்கமைதிக்குலைவைத் தடுப்பதற்குப் பொலிசு அலுவலரொருவரின் உதவியைப் பெறலாம்.

(6) ஓராம் உட்பிரிவின் கீழான புலனாய்வொன்றின்போது, மத்திய வங்கி ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுமென அஞ்சுமிடத்து, மத்திய வங்கி, அத்தகைய புலனாய்வு எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் செய்யப்படுகின்றதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்குப் பணச் சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, விடயத்துக்கேற்ப, எந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் அல்லது வேறு ஆளின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் அல்லது வெளிநாட்டுச் சொத்துக்கள் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றதோ அல்லது புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றனவோ அல்லது புலனாய்வு செய்யப்படவுள்ளதோ அல்லது புலனாய்வு செய்யப்படவுள்ளனவோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியை அல்லது வேறு ஆளை அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் முன்னர் தோன்றும்படி அல்லது அத்தகைய புலனாய்வுக்காக மத்திய வங்கி அல்லது புலனாய்வைச் செய்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தேவைப்படுத்தக்கூடியவாறாக அத்தகைய வியாபாரியின் அல்லது ஆளின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள அத்தகைய புத்தகங்களை அல்லது ஆவணங்களைக் காண்பிக்கும்படி பணிக்கின்ற கட்டளையொன்றைப் பெறலாம்.

(7) பணச்சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் (6)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, எந்த அதிகாரமளிக்கப்பட்ட வியா பாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் அல்லது வேறு ஆளின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றதோ அல்லது புலனாய்வு செய்யப்படவுள்ளதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் அல்லது வேறு ஆளின் பெயரும் முகவரியும்

(ஆ) புலனாய்வு எந்தவளவுகளில் செய்யப்படவுள்ளதோ அந்த வளவுகளின் முகவரி

(இ) புலனாய்வைச் செய்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் அத்துடன்

(ஈ) பின்வருவனவற்றுக்காகக் கட்டளையொன்றுக்கான இறைஞ்சுதலொன்று:-

(i) அத்தகைய வியாபாரி அல்லது ஆள் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் முன்னர் தோன்றுவதற்காகவும்

(ii) புத்தகங்களையும் ஆவணங்களையும் மத்திய வங்கிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் காண்பிப்பதற்காகவும்.

(iii) அதிகாரமளிக்கப்பட்ட ஆள் இப்பிரிவின் கீழான புலனாய்வொன்றைச் செய்வதற்கெதிராக அவருக்கு முட்டுக்கட்டையிடுவதனைத் தவிர்ப்பதற்காகவும்.

(8) (அ) நீதிமன்றமானது, (6)ஆம், (7)ஆம் உட்பிரிவுகளின் கீழான விண்ணப்பத்தைக் கவனத்துட்கொண்டபின்னர், (7)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் இறைஞ்சிக்கேட்கப்பட்ட கட்டளையொன்றை ஆக்கலாமென்பதுடன், அத்தகைய வியாபாரி அல்லது ஆள் உடனடியாகக் கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வின் கீழ் நீதிமன்றக் கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் வியாபாரி அல்லது ஆள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழான தவறு தொடர்ந்துபுரியப்படும் தவறொன்றாகவிருக்குமிடத்து, அத்தகைய வியாபாரி அல்லது ஆள் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு இலட்சம் ரூபாவான மேலதிக குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

11. (1) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் நடப்புக் கொடுக்கல்வாங்கலில் அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கலில் வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுகின்றாரென

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்பாக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுகின்றாரென

(இ) 9ஆம் பிரிவின் (1)ஆம், (2)ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டு நெறிகளுக்கு அல்லது ஏதேனும் பணிப்புக்கு அல்லது 9ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றாரென அல்லது

(ஈ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது கட்டளையை மீறுகின்றாரென,

மத்திய வங்கி திருப்திப்படுமிடத்து, மத்திய வங்கியானது, அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டதன்மேல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு, கட்டளைக்கு, வழிகாட்டு நெறிக்கு அல்லது பணிப்புக்கு, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இணங்கியொழுகும்படி அத்தகைய எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியைப் பணிக்கின்ற அறிவித்தலொன்றை வழங்கலாம்.

(2) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்கச் செயலாற்றுவதற்குத் தவறுமிடத்து, மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 4ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரவளிப்பை அல்லது 4ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தலாம்.

(3) மத்திய வங்கியானது, (2)ஆம் உட்பிரிவின்கீழான தற்காலிக இடைநிறுத்துகையொன்று இருக்குமிடத்து, கேட்கப்படுவதற்கு நியாயமான சந்தர்ப்பமொன்றை அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அளிக்கின்ற விசாரணையொன்றின் பின்னரும், பணச்சபையின் அங்கீகாரத்துடனும், 4ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரவளிப்பை அல்லது அனுமதிப்பத்திரத்தை இல்லாதொழிக்கலாம்.

(4) மத்திய வங்கியானது, (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சூழ்நிலைகளில், (3)ஆம் உட்பிரிவின்கீழான அதிகாரவளிப்பை அல்லது அனுமதிப்பத்திரத்தை இல்லாதொழிப்பதற்கு முற்படாமல், கேட்கப்படுவதற்கு நியாயமான சந்தர்ப்பத்தை அளித்தபின்னரும், இயைபான எல்லாச் சூழ்நிலைகளையும் கவனத்துட்கொண்டு தோதானதென அது கருதப்படுமிடத்தும்:-

(அ) (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்பான ஏதேனும் கையாளுகையில் ஈடுபடுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவரை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரை, அத்தகைய தேவைப்பாட்டில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், அத்தகைய கொடுக்கல்வாங்கலைக் கண்டுபிடித்து புலனாய்வு செய்வதற்காக மத்திய வங்கியினால் உறப்பட்ட அத்தகைய செலவுகளுடன் சேர்த்து அத்தகைய வெளிநாட்டுச் சொத்தின் தொகையை அல்லது பெறுமதியை அல்லது வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை நாணயத்தில் அதன் ஏதேனும் பாகத்தை விஞ்சாத தொகையொன்றை மத்திய வங்கிக்குச் செல்லும்படி தேவைப்படுத்தலாம் அல்லது

(ஆ) அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கலுக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் திறத்தவரொருவராகவிருந்துள்ள அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின்மீது அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின்மீது, பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, விடயத்துக்கேற்ப, வெளிநாட்டுச் செலாவணி தொடர்பாக நடப்பு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கலைக் கையாளுவதற்கெதிராக அல்லது அதில் ஈடுபடுவதற்கெதிராக வரையறையொன்றை விதிக்கலாம்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவராக இராத வேறெவரேனுமாள் அல்லது வகுப்பினரான அல்லது வகுப்பினர்களான ஆட்கள் (1)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுமிடத்து மத்திய வங்கி, அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டதன்மேல், கேட்கப்படுவதற்கு அத்தகைய ஆளுக்கு நியாயமான சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றைத் தண்டமாகச் செலுத்தும்படி, வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை நாணயத்தில் அத்தகைய நடப்புக் கொடுக்கல்வாங்கலின் அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கலின் தொகையை அல்லது பெறுமதியை அல்லது அத்தகைய வெளிநாட்டுச் சொத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் பெறுமதியை விஞ்சாத தொகையிலானவொரு தண்டத்தை, அத்தகைய கொடுக்கல்வாங்கலைக் கண்டுபிடிப்பதற்காகவும் புலனாய்வுசெய்வதற்காகவும் மத்திய வங்கியினால் உறப்பட்ட அத்தகைய செலவுகளுடன் சேர்த்துச் செலுத்தும்படி அத்தகைய ஆளை எழுத்தில் தேவைப்படுத்தலாம்.

(6) மத்திய வங்கியானது, (3)ஆம் உட்பிரிவின்கீழான அதிகாரவளிப்பை அல்லது அனுமதிப்பத்திரத்தை இல்லா தொழிக்குமிடத்து அல்லது (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்துமிடத்து அல்லது (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழான வரையறையை விதிக்குமிடத்து, மத்திய வங்கி, அதன் முடிபை அல்லது தீர்மானத்தை, அதற்கான காரணங்களுடன் சேர்த்து அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(7) (அ) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி -

(i) (3)ஆம் உட்பிரிவின்கீழான அதிகாரவளிப்பு அல்லது அனுமதிப்பத்திரம் இல்லாதொழிக்கப்பட்டமையினால் இன்னலுறுமிடத்து

(ii) (4)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையைச் செலுத்துவதற்கான தேவைப்பாட்டினால் இன்னலுறுமிடத்து அல்லது

(iii) (4)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் வரையறையினால் இன்னலுறுமிடத்து,

விடயத்துக்கேற்ப, அத்தகைய முடிபு அல்லது தீர்மானம் அத்தகைய வியாபாரிக்கு அறிவிக்கப்பட்டபின்னர் முப்பது நாட்களினுள் அத்தகைய இல்லாதொழிப்புக்கு அல்லது தீர்மானத்துக்கு எதிராக விசாரணை சபைக்கு அவர் மேன்முறையீடு செய்யலாம் 13ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்க அது அத்தகைய மேன்முறையீட்டைத் தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவராகவிராத எவரேனுமாள் (5)ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டத்தினால் இன்னலுறுமிடத்து, அத்தகைய ஆளுக்கு அத்தகைய தண்டம் செலுத்தப்படுவதற்கான தேவைப்பாடு அறிவிக்கப்பட்டபின்னர் முப்பது நாட்களினுள், அத்தகைய தண்டத்தைச் செலுத்துவதற்கான அத்தகைய தேவைப்பாட்டுக்கெதிராக விசாரணைச் சபைக்கு அவர் மேன்முறையீடு செய்யலாம் 13ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்க அது அத்தகைய மேன்முறையீட்டைத் தீர்மானித்தல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்றின்மீது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கமைய, (3)ஆம் உட்பிரிவின் கீழான அதிகாரவளிப்பின் அல்லது அனுமதிப்பத்திரத்தின் இல்லாதொழிப்பு அல்லது (4)ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் வரையறை, அத்தகைய மேன்முறையீடு எவ்வாறிருப் பினும், விடயத்துக்கேற்ப, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் மீது அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின்மீது இல்லாதொழித் தற்கட்டளை அல்லது வரையறைக்கட்டளை அல்லது ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டும்.

(9) நான்காம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் தண்டம், திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

12. பதினோராம் பிரிவின்கீழான ஒவ்வொரு புலனாய்வும் விசாரணையும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் காலநீடிப்பொன்று பெறப்பட்டாலொழிய, அத்தகைய புலனாய்வு அல்லது விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து ஆறு மாதகாலப்பகுதியினுள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

13. (1) பதினோராம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் பற்றி

விசாரணை செய்வதற்கு அமைச்சர் விசாரணைச் சபையொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணைச் சபை, அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சபையின் தவிசாளராகவிருக்கவேண்டிய உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் அத்துடன்

(ஆ) சர்வதேச நிதிசார் அல்லது செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கருமங்களில் பரிச்சயமுள்ளவர்களும், பகிரங்க அல்லது தனியார் துறையில் சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் பெற்றுள்ளவர்களும், நன்னிலையிலுள்ளவர்களும் மற்றும் நன்மதிப்புக்கொண்டவர்களுமான ஆட்கள் இருவர்.

(3) விசாரணைச் சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின் மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) விசாரணைச் சபையின் உறுப்பினரொருவருக்கு, அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆளொருவர் பின்வருமாறிருப்பின், விசாரணைச் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அதில் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ஷர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால் அல்லது

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழித்தால் அல்லது

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமின்மையினால் பீடிக்கப்பட்டவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் அல்லது

(ஈ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால் அல்லது

(உ) அவர், சபையின் உறுப்பினரொருவர் என்ற முறையில் அவரது பணிகள் அவரினால் நிறைவேற்றப்படுவ தனைப்பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

(6) (அ) விசாரணைச் சபையின் எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும், அமைச்சருக்கு அப்பயன்பட முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவிவிலகுகை எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் அத்தகைய பதவிவிலகுகை பயனுறுதலும் வேண்டும்.

(ஆ) அமைச்சர் அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(இ) விசாரணைச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் ஏதேனும் பதவி, இறப்பின்மூலம், பதவிவிலகுவதன் மூலம், பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது நடைமுறையின் மூலம் வறிதாக வரும் பட்சத்தில், அமைச்சர், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, வேறோர் ஆள் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கு அந்த வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(ஈ) விசாரணைச் சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், அமைச்சர், முடிவுறாதுள்ள காலப்பகுதிக்காக அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(7) விசாரணைச்சபை, மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அத்தகைய கருமம் தொடர்பில் அதன் தீர்மானத்தைச் செய்தல் வேண்டும்.

(8) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும் நேரில் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருடன் விசாரணைச் சபையின் முன்னர் தோற்றுதல் வேண்டும்.

(9) மேன்முறையீடொன்று கேட்கப்பட்டபின்னர், விசாரணைச் சபை, எந்த முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது எதிர்மாறாக்கலாம்.

(10) விசாரணைச் சபையின் முடிபும் அதற்கான காரணங்களும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும் அத்துடன் விசாரணைச் சபை அதன்மீதான அறிக்கையொன்றை அமைச்சருக்கு அனுப்புதலும் வேண்டும்.

14. பதினோராம் அல்லது 13 ஆம் பிரிவின்கீழ் மத்திய வங்கிக்கு ஏதேனும் பணத்தொகையை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவரேனுமாள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு வொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், உறுப்பினரும் அல்லது பங்காளரும், அத்தகைய தொகையை அல்லது பெறுமதியை மற்றும் செலவுகளைச் செலுத்துவதற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் நேரடியாக ஆளாதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய பணிப்பாளர், உறுப்பினர் அல்லது பங்காளர், அத்தகைய பொறுப்பை உறுகின்ற செயல் அல்லது செய்யாமை அத்தகைய ஆள் அறியாமல் செய்யப்பட்டது அல்லது செய்யாதுவிடப்பட்டது அல்லது அத்தகைய செயலை அல்லது செய்யாமையைத் தடுப்பதற்கு

அத்தகைய ஆள் உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தாரென அத்தகைய ஆள் எண்பித்தால், அத்தகைய தொகையை அல்லது பெறுமதியைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

15. (1) (அ) பதினோராம் அல்லது பதின்மூன்றாம் பிரிவின் கீழ் எவரேனுமாள் மத்திய வங்கிக்கு ஏதேனும் பணத்தொகையை அல்லது தண்டத்தைச் செலுத்தத்தவறுமிடத்து, மத்திய வங்கியின் ஆளுநர், அத்தகைய ஆளினால் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணத்தொகையை எடுத்துக்கூறி, தமது கைப்பட்ட சான்றிதழொன்று வழங்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட பணத்தொகை, அத்தகைய ஆளிடமிருந்து அரசாங்கத்துக்கு வருமதியாகவுள்ள தனிசொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாள் வதிகின்ற மாவட்டத்தில் நியாயாதிக்கங்கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்துக்குச் சான்றிதழொன்றை வழங்குவதன்மூலம் மத்திய வங்கியினால் அறவிடவும்படலாம்.

(இ) அத்தகைய சான்றிதழ் வருமதியான பணத்தொகை பற்றிய விபரங்களையும் 4ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரவளிப்பில் கொடுக்கப்பட்டவாறான பெயரையும் வதிவிடத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) நீதிமன்றமானது, அதன்மேல், செலுத்தத்தவறுகின்ற ஆளின் அசைவுள்ள மற்றும் அசைவற்ற எல்லா ஆதனங்களையும் அல்லது அவ்வாறு வருமதியான தொகையை அறவிடுவதற்கு அவசியமென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அதன் அத்தகைய பாகத்தைக் கைப்பற்றி விற்பனைசெய்யும்படி பிசுக்காலுக்கு அதிகாரமளிக்கின்றதும் அவரைத் தேவைப்படுத்துகின்றதுமான நிறைவேற்றெழுத்தாணையொன்று வழங்கப்படவேண்டுமென பணித்தல் வேண்டுமென்பதுடன், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய கைப்பற்று கைக்கும் விற்பனைக்கும் அவை தொடர்பாகவும் எற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணத்தொகையை அறவிடுவது செயல் முறைக்கு கந்ததல்லதென அல்லது உசிதமானதல்லதென மத்திய வங்கி அபிப்பிராயப்படுமிடத்து அல்லது கைப்பற்றுகையின் மூலமும் விற்பனையின் மூலமும் முழுத்தொகையும் அறவிடப்பட்டிராதவிடத்து, அப்போது, மத்திய வங்கியானது, நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானுக்கு, 4ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரவளிப்பில் கொடுக்கப்பட்டவாறாக அவ்வாறு வருமதியான பணத்தொகை பற்றிய விபரங்களையும் ஆளின் பெயரையும் வதிவிடத்தையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை வழங்கலாம்.

(ஆ) நீதிவான், அதன்மேல், இச்சட்டத்தின்கீழ் வருமதியான பணத்தொகையை அறவிடுவதற்காக மேலதிக வழக்கு நடவடிக்கைகள் அவருக்கெதிராக ஏன் எடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டுவதற்கு அத்தகைய ஆளைக் கட்டளைவிட்ட ழைத்தல் வேண்டுமென்பதுடன், போதிய காரணங்காட்டப் படுவதற்குத் தவறப்படுமிடத்து, அத்தகைய பணத்தொகை நீதிவானின் தண்டனைத் தீர்ப்பினால் அத்தகைய ஆளின்மீது விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணக் கொடுப்பனவு செலுத்தத் தவறப்படுதல் தொடர்பாக, 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள் தவிர, அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவர் செய்திருக்கக்கூடிய அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின் மூலம் ஏதேனும் பணிப்பை விடுக்கலாம்.

(3) (அ) இப்பிரிவின் நோக்கத்துக்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றிலான ஏதேனும் கூற்றின் சரியானதன்மை, இப்பிரிவின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் நீதிமன்றத்தினால் கேள்விக்குட்படுத்தப்படுதலோ அல்லது பரிசோதனை செய்யப்படுதலோ ஆகாதென்ப துடன், அதற்கிணங்க, இப்பிரிவிலுள்ளதெதுவும், அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் சரியான தன்மையைக் கவனத்துட்கொள்வதற்கு அல்லது முடிபுசெய்வதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரமளித்தலுமாகாது அத்துடன் மத்திய வங்கியின் சான்றிதழ், செலுத்தத்தவறிய ஆளிடமிருந்து இச்சட்டத்தின்கீழ் வருமதியான தொகைமுறையாகக் கணக்கிடப்பட்டுள்ள தென்பதற்கும் அத்தகைய தொகை செலுத்தத் தவறப்பட்டுள்ள தென்பதற்கும் போதிய சான்றாதலும் வேண்டும்.

(ஆ) சான்றிதழானது மத்திய வங்கியின் ஆளுநரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், கையொப்பத்துக்கான எண்பிப்பின்றி அத்தகைய வழக்கில் சான்றாக ஏல் தகவுடையதாதலும் வேண்டும் அத்துடன் அதன்கண் கூறப்பட்ட கருமங்கள் பற்றி அது முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான வழக்கொன்றில் அறவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை திரட்டு நிதியத்தினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் அனுமதி, சம்மதம் அல்லது அதிகாரம் -

(அ) பொதுவானதாக அல்லது விசேடமானதாக இருக்கலாம்

(ஆ) முழுமையானதாக அல்லது நிபந்தனையுடனானதாக இருக்கலாம்

(இ) புதுப்பிக்கப்பட்டாலொழிய, குறித்துரைக்கப்பட்டவொரு தேதியன்று முடிவுறும்வகையில் வரையறுக்கப்படலாம் அத்துடன்

(ஈ) வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

17. பதின்மூன்றாம் பிரிவின்கீழான ஏதேனும் விசாரணையில், எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாக இராத வேறெவரேனுமாள் அல்லது வகுப்பினரான அல்லது வகுப்பினர்களான ஆட்கள், சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின், கட்டளையின், வழிகாட்டுநெறியின் அல்லது பணிப்பின் மீறுகை யாக அமைகின்ற செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாமை யைப் புரிவதற்கு மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்றிருந் தாரென்பதை எண்பிப்பதற்கான பொறுப்பு அத்தகைய வியாபாரியை, ஆளை அல்லது வகுப்பினரான அல்லது வகுப்பினர்களான ஆட்களைச் சார்ந்ததாதல் வேண்டும்.

18. வெளிநாட்டு நாணயம் தொடர்பாக 13ஆம் பிரிவின்கீழான ஏதேனும் விசாரணையில், எந்த நாணயம் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, கட்டளையை, வழிகாட்டுநெறியை அல்லது பணிப்பை மீறுகின்ற வெளிநாட்டுச் செலாவணியின் கையாளுகை புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப் படுகின்றதோ அந்த நாணயம் மெய்யானதாகவுள்ளதென முரணாக எண்பிக்கப்படும் வரை ஊகிக்கப்படுதல் வேண்டும்.

19. பதின்மூன்றாம் பிரிவின்கீழான ஏதேனும் விசாரணையில் அல்லது 11ஆம் பிரிவின்கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பின்வரும் ஆவணங்களுள் எவையும் விசாரணைச் சபையின் முன்னா் அல்லது நீதிமன்றத்தின் முன்னா் காண்பிக்கப்படலாமென்பதுடன், எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கெதிராக, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கெதிராக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாக இராத வேறெவரேனுமாளுக்கெதிராக அல்லது வகுப்பினரான அல்லது வகுப்பினா்களான ஆட்களுக்கெதிராகச்சான்றாக அளிக்கவும்படலாம் அத்துடன் அதன்கண் அடங்கியுள்ள கருமங்கள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கணக்குகள் பற்றி முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்:-

(அ) வங்கியின் முகாமையாளா் அல்லது பிரதான கணக்காளரிடமிருந்து பெறப்பட்ட வங்கியாளா் புத்தகத்தின் அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதியின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று

(ஆ) கம்பெனியொன்றின் பணிப்பாளா் அல்லது செயலாளரிடமிருந்து பெறப்பட்டதும் அக்கம்பெனியினால் பேணப்படுவதற்குச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் புத்தகத்தின் அல்லது வேறு பதிவேட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று அல்லது அதன் பிரித்தெடுத்தபகுதியின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதியொன்று அத்துடன்

(இ) வெளிநாட்டு அரசாங்கமொன்றின் அலுவலரொருவரின் முறையான கட்டுக்காப்பிலுள்ளதும் அத்தகைய அலுவலரிடமிருந்து பெறப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தின் அல்லது அதன் பிரித்தெடுத்த பகுதியின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

20. இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக ஆளெவரும் ஏதேனும் துடா்ச்சியில் அல்லது வேறு சட்ட நடவடிக்கைகளில் ஆளாதலாகாது.

21. (1) மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் ஒவ்வோா் அலுவலரும் அல்லது சேவையாள ரும் இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரியும்போதுதவிர, இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் புரியும்போது அவரது அறிவுக்கெட்டக்கூடிய எல்லாக் கருமங்கள் தொடா்பாகவும் இரகசியத்தைப் பேணுதலும் பேணுவதில் உதவுதலும் வேண்டு மென்பதுடன்-

(அ) அக்கருமம் எவ்வாள் அல்லது எவ்வகுப்பினரான அல்லது எவ்வகுப்பினா்களான ஆட்கள் தொடா்பானதோ அவ்வாள் அல்லது அவ்வகுப்பினரான அல்லது அவ்வகுப்பினா்களான ஆட்கள் அல்லது அத்தகைய ஆளின் அல்லது அவ்வகுப்பினரான அல்லது அவ்வகுப்பினா்களான ஆட்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி

(ஆ) பணச்சபை

(இ) மத்தியவங்கியின் ஆளுநா் அல்லது அக்கருமம் தொடா்பான தகவல்களைப் பெறுவதற்கு ஆளுநரினால் அதிகாரமளிக்கப்பட்ட மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவலா்

(ஈ) மத்திய வங்கி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளா்

(உ) அக்கருமம் தொடா்பாகத் தகவல்களைப் பெறுவதற்கு அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட பகிரங்க அலுவலா் அல்லது

(ஊ) இச்சட்டத்தின், அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகு வதனை உறுதிப்படுத்துகின்ற அல்லது அதனைத் தட்டிக்கழிப்பதனைக் கண்டுபிடிக்கின்ற நோக்கத்துக்காக அக்கருமத்தை எவ்வாளுக்கு அறிவிப்பது அவசியமாகவுள்ளதோ அவ்வாள்,

தவிர்ந்த எவரேனுமாளுக்கு அத்தகைய ஏதேனும் கருமத்தை அறிவிக்கின்ற அல்லது மேற்கூறப்பட்ட திணைக்களத்தின் அல்லது அத்திணைக்களைத் தலைவரின் உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் புத்தகங்களை, பத்திரங்களை அல்லது பதிவேடுகளை அணுகுவதற்கு அதிகாரமளிக்கப்படாத எவரேனுமாளுக்கு இடமளிக்கின்ற அல்லது அனுமதியளிக்கின்ற அத்தகைய எவரேனும் அலுவலா் அல்லது சேவையாளா் தவறொன்றைப் புரிகின்றாா்.

(2) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் அலுவலா் அல்லது சேவையாளா் எவரும், பணச்சபை எந்தச் சட்ட நடவடிக்கைகளுக்குத் திறத்தவராக இராதுள்ளதோ அந்த எவையேனும் சட்ட நடவடிக்கைகளில், ஏதேனும் புத்தகத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிப்பதற்கு அல்லது இச்சட்டத் தின்கீழ் அவரது கடமைகளைப் புரிவதில் அவரது கவனத்தின்கீழ் வருகின்ற ஏதேனும் கருமத்தை வெளிவிடுவதற்கு அல்லது அறிவிப்பதற்கு நீதிமன்றத்தின் கட்டளைமூலம் தவிர கட்டாயப்படுத்தப்படத் தக்கவராதல் ஆகாது.

22. (1) பணச்சபையின் அபிப்பிராயத்தில் இலங்கையினுள் மீது அல்லது இலங்கையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் அனுப்புதொகைகள் இலங்கையின் நிதிசாா் நிலையுறுதிக்கு நிகழ்தகு அச்சுறுத்தலாக அமைகின்றனவெனச் சபையானது அமைச்சருக்கு மதியுரையளிக்குமிடத்து, அமைச்சா், அமைச் சரவையின் அங்கீகாரத்துடனும், இச்சட்டத்தின் 5 ஆம், 6 ஆம், 7ஆம், 8 ஆம், பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வா்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய காலப்பகுதிக்கு, இலங்கையிலுள்ள அல்லது இலங்கையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் அனுப்புதொகைகளை மட்டுப் படுத்துவதற்கு அல்லது ஒழுங்குபடுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று பாராளு மன்றத்துக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றம் வேறுவகையாகத் தீா்மானித்தாலொழிய, அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அது செல்லுபடியுடையதாதலும் வேண்டும்.

(3) அமைச்சா், பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன், வா்த்த மானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (1) ஆம் உட்பிரி வின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் செல்லுபடிக்காலப் பகுதியைக் காலத்திற்குக்காலம் நீடிக்கலாம் எவ்வாறாயினும் அத்தகைய நீடிப்புகளின் காலப்பகுதி கூட்டுமொத்தத்தில் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சுதலாகாது.

23. (1) மத்திய வங்கியினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்பட்ட ஏதேனும் துடா்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடா்ச்சியில் அல்லது குற்றவழக்கில் மத்திய வங்கிக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள்,

திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது மத்திய வங்கியின் பணிப்பின்மீது மத்திய வங்கியின் ஊழியர்களினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாயின், அத்தகைய செலவுகள் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்கு நடவடிக்கை களில் அத்தகைய ஆளினால் அறவிடற்படற்பாலனவாக இருந்தாலொழிய, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

24. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் நியதியைப் புரிவதற்காக மத்திய வங்கியின் அனுமதி அல்லது சம்மதம் ஒப்பந்தம் செய்யப்பட்ட நேரத்தில் தேவைப்படுமென்பதும், அவ்வனுமதி அல்லது சம்மதம் அளிக்கப்பட்ட அளவுவரைதவிர அந்நியதிகள் புரியப்படலாகாதென்பதும் அல்லது அவ்வனுமதி அல்லது சம்மதம் தேவைப்படமாட்டாதென்பதும், அதன் உட்கிடையான நிபந்தனையொன்றாகவிருத்தல் வேண்டும்.

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், அந்நிய திக்கு அவ்வேற்பாடுகளின் ஏற்புடைமை, அவ்வொப்பந்தத் துக்கான திறத்தவர்களின் உட்கருத்துடன் ஒவ்வாததாகவிருக்கும் அளவுவரை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாது அந்நியதியைப் புரிவதற்கு அவர்கள் உத்தேசித்திருக்கும் காரணத்தினாலாயினுஞ்சரி அல்லது வேறேதேனும் காரணத் துக்காகவாயினுஞ்சரி, அந்நியதிக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) (82 ஆம் அத்தியாயமான) நாணயமாற்றுண்டியல்கள் கட்டளைச்சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் அனுமதியின்றி ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதலாகாதென்ற அவ்வேற்பாடுகளைக் கருத்திற் கொண்டு இச்சட்டத்தின் ஏற்பாடுகளோ அல்லது வெளிப்படை யானதாயினுஞ்சரி அல்லது உட்கிடையானதாயினுஞ்சரி ஏதேனும் நிபந்தனையோ, சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் நாணயமாற்றுண்டியலாக அல்லது வாக்குறுதிப்பத்திரமாக உள்ள ஏதேனும் சாசனத்தைத் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

25. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் ஏதேனும் செயல் புரியப்படுவது தொடர்பில் கடப்பாடொன்றைச் சுமத்துமிடத்தும் மத்திய வங்கியின் அனுமதி அல்லது சம்மதம், அச்சட்டத்தின் பயனைக்கொண்டு அக்கடப்பாட்டை நிறை வேற்றுவதற்குத் தேவைப்படுமிடத்தும், அவ்வனுமதி அல்லது சம்மதம் அளிக்கப்படுகின்றது அல்லது தேவைப்படுத்தப் படுவதில்லை என்ற அளவுவரைதவிர அது நிறைவேற்றப்படு தலாகாதென்பது அக்கடப்பாட்டின் உட்கிடையான நிபந்தனை யொன்றாக இருத்தல் வேண்டும்.

26. (1) இச்சட்டத்தின் எந்த ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட எந்த ஒழுங்குவிதிக்கு, கட்டளைக்கு அல்லது பணிப்புக்குத் தண்டமெதுவும் விதித்துரைக்கப்பட வில்லையோ அந்த எவையேனும் ஏற்பாடுகளுக்கு, ஒழுங்குவிதிக்கு, கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை அத்தகைய தேவைப்பாட்டில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் தண்டமாகச் செலுத்தும்படி மத்திய வங்கியினால் எழுத்தில் தேவைப்படுத்தப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தண்டமொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய தண்டத்தைச் செலுத்து வதற்கான தேவைப்பாடு அத்தயை ஆளுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களினுள் அத்தகைய தண்டத்தைச் செலுத்து வதற்கான அத்தகைய தேவைப்பாட்டுக்கெதிராக விசாரணைச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம் அது, 13ஆம் பிரிவில் தரப் பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க அத்தகைய மேன் முறையீட்டைத் தீர்மானித்தல் வேண்டும்.

27. இச்சட்டத்துக்கான அட்டவணைகள், காலத்துக்குக்காலம், தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி, பாராளுமன்ற தீர்மானத்தின்மூலம் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

28. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுமிடத்து, சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மூன்று நாளாந்தச் செய்தித்தாள்களில் ஒருதடவை அது வெளியிடப்படுதல் வேண்டும்.

29. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

30. (1) (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) மேற்கூறப்பட்ட சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும்-

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிபுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்கு களும், வழக்கு நடவடிக்கைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட துடர்ச்சிகளாகவும், வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின்கீழ் கேட்டு

முடிவுறுத்தப்படுதலும் வேண்டும் அத்துடன்

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாப் புலனாய்வுகளும் விசாரணைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட புலனாய்வுகளாகவும், விசாரணைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதக் காலப்பகுதியினுள் அச்சட்டத்தின்கீழ் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

31\. (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக-

(அ) "நாணயம்" என்பது, குற்றிநாணயங்கள், நாணயத் தாள்கள், அஞ்சற் கட்டளைகள், பணக் கட்டளைகள், காசோலைகள், வரைவுகள் பயணிக் காசோலைகள், கடன் பத்திரங்கள், நாணயமாற்றுண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், வேறு இலத்திரணியல் நிதிக் கைமாற்றுகை அட்டைகள் மற்றும் டிஜிட்டல் நாணயம் என்பனவற்றை உள்ளடக்கும்

(ஆ) "பிணையங்கள்" என்பது, பங்குகள், பங்குத்தொகுதி, முறிகள், கடன்தொகுதிப்பத்திரங்கள், ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்புத் திட்டத்தின்கீழான அல்லது ஏதேனும் பரஸ்பர நிதியத்தின் கூறுகள் என்று பொருளாகும்.

(2) மத்திய வங்கியானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம், இப்பிரிவின் குறித்துரைக்கப்படாத நாணயம் அல்லது பிணையங்கள் தொடர்பாக வேறேதேனும் சாசனத்தைக் குறித்துரைக்கலாம்.

(3) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக "இலங்கையில் வதிபவரான ஆளொருவர்" என்பது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய ஆள் என்று பொருளாகும்.

32\. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

33\. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"சொத்து" என்பது, எத்தகையதுமான ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் என்று பொருளாகும்

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாகச் செயலாற்றுவதற்கு 4ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டதும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்டதுமானவொரு வங்கி என்று பொருளாகும்

"மூலதனக் கொடுக்கல்வாங்கல்" என்பது, இச்சட்டத்தின் கருத்துக்குட்பட நடப்புக் கொடுக்கல்வாங்கலாகவிராதவொரு கொடுக்கல்வாங்கல் என்று பொருளாகும்

"மத்திய வங்கி" என்பது, (420 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்

"நடப்புக் கொடுக்கல்வாங்கல்" என்பது, இலங்கையினுள் அல்லது இலங்கையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் கைமாற்றத்தை அவசியமாக்குகின்றதும், இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள சர்வதேச பண நிதியத்தின் உறுப்புரைகளினது ஒஒஒ ஆம் உறுப்புரையின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் சர்வதேசக் கொடுக்கல்வாங்கல் என்று பொருளாகும்

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்

"வெளிநாட்டுச் சொத்து" என்பது, எத்தகையதுமான ஏதேனும் வகுப்பினதானதும் அல்லது விவரணத்தினதானதும், இலங்கைக்கு வெளியே உள்ளதுமான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் என்று பொருளாகும் என்பதுடன், இவ்வரைவிலக்கணத்தின் முன்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, வெளிநாட்டு நாணயம், வெளிநாட்டுப் பிணையங்கள் மற்றும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் என்பவற்றையும் உள்ளடக்கும்

"வெளிநாட்டு நாணயம்" என்பது, இலங்கை நாணயம் தவிர்ந்த ஏதேனும் நாணயம் என்று பொருளாகும்

"வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்பது, வெளிநாட்டுச் செலாவணியைக் கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்றிலான வெளிநாட்டு நாணயக் கணக்கு என்று பொருளாகும்

"வெளிநாட்டு செலாவணி" என்பது, வெளிநாட்டு நாணயம் என்று பொருளாகுமென்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:

(அ) வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்படற்பாலன வான வைப்புக்கள், வரவுகள் மற்றும் மீதிகள்

(ஆ) இலங்கையில் வரையப்பட்டனவும் வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியே செலுத்தப் படற்பாலனவுமான வரைவுகள், பயணிக் காசோலைகள், கடன் பத்திரங்கள் மற்றும் நாணய மாற்றுண்டியல்கள்

(இ) இலங்கைக்கு வெளியே வரையப்பட்டனவும் இலங்கையில் ஆனால் இலங்கை நாணயத்தில் செலுத்தப்படற்பாலனவுமான வரைவுகள், பயணிக் காசோலைகள், கடன் பத்திரங்கள் மற்றும் நாணய மாற்றுண்டியல்கள்

(ஈ) நிதிகளின் சர்வதேச கைமாற்றல்களுக்காக வழக்க முறையாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வகையினதான ஏதேனும் ஆவணம் அல்லது சாதனம்

"வெளிநாட்டுச் செலாவணிக் கையாளுகைகள்" என்பது, வெளிநாட்டுச் செலாவணியையும் வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்துக்கான செலாவணியையும் ஏற்றுக்கொள்ளுதல், வாங்குதல், விற்பனைசெய்தல், கடனாகப்பெறுதல் மற்றும் கடனாகக்கொடுத்தல் என்பனவற்றையும் உள்ளடக்கும்

"வெளிநாட்டுப் பிணையம்" என்பது, வெளிநாட்டு நாணயத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் அல்லது வெளிப்படுத்தப்பட்டதும் இலங்கைக்கு வெளியே

வழங்கப்பட்டதுமானவொரு பிணையம் என்று பொருளாகும்

“உரிமமளிக்கப்பட்ட வங்கி” என்பது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று என்று பொருளாகும்

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு வங்கி என்று பொருளாகும்

“உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி” என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 76 அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு வங்கி என்று பொருளாகும்

“அமைச்சர்” என்பது, மத்திய வங்கி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்

“பணச்சபை” என்பது, மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும்

“அனுமதிப்பத்திரம்” என்பது, 4ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்

“ஆள்” என்பது, பங்காண்மைகளுட்பட எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருளாகும்

“இலங்கைக்கு வெளியே வதிபவராகவுள்ள ஆள்” என்பது, இலங்கையில் வதிபவராகவிராத ஆளொருவர் என்று பொருளாகும் அத்துடன்

“இலங்கை நாணயம்” என்பது, இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்ட அல்லது வரையப்பட்ட நாணயம் என்று பொருளாகும்

**அட்டவணை** [பிரிவுகள் 5, 6 மற்றும் 33]

சர்வதேசப் பண நிதியம்

உடன்படிக்கை மீதான உறுப்புரைகள்

உறுப்புரை XXX

நியதிகளின் விளக்கம்

(ஈ) நடப்புக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகள் என்பது, மூலதனச் சொத்துக்களைக் கைமாற்றும் நோக்கத்துக்காகவிராத கொடுப்பனவுகள் என்று பொருளாகும் என்பதுடன், வரையறையின்றி, பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(1) சேவைகளுட்பட, வெளிநாட்டு வியாபாரம் ஏனைய நடப்புத் தொழில் மற்றும் வழமையான குறுகியகால வங்கித்தொழில் மற்றும் கடன் வசதிகள் சம்பந்தமாக வருமதியான எல்லாக் கொடுப்பனவுகளும்

(2) கடன்களின்மீதான வட்டியாகவும் ஏனைய முதலீடுகளி லிருந்தான தேறிய வருமானமாகவும் வருமதியான கொடுப்பனவுகள்

(3) கடன்களைத் தீர்த்துவைப்பதற்காக அல்லது நேரடி முதலீடுகளை மதிப்பிறக்கம் செய்வதற்காக மட்டளவான தொகையின் கொடுப்பனவுகள் அத்துடன்

(4) குடும்ப வாழ்க்கைச் செலவுகளுக்காக மட்டளவான அனுப்பு தொகைகள்.

நிதியமானது, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடனான கலந்தாலோசனையின் பின்னர், குறித்த சில குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் நடப்புக் கொடுக்கல்வாங்கல்களாக அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல்களாகக் கருதப்பட வேண்டுமாமென்பதைத் தீர்மானிக்கலாம்.

## 2017ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டம்

[2017ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 03ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் அமுலாக்குவதற்காகவும் நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையொன்றைத் தாபிப்பதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

பதினேழு நிலைபெறுதகு அபிவிருத்தி இலட்சியங்களும் நூற்றியறுபத்தொன்பது இணைந்துள்ள இலக்குகளும் இரண்டாயிரத்துப்பதினைந்தாம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனவாதலாலும்:

அத்துடன் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் வடிவமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும், அமுலாக்குவதற்கும் மற்றும் பொறுப்பாகவுள்ள எல்லா முகவராண்மைகளுக்கும் வசதியளிப்பதற்கும் முன்னேற்றத்தை மேலெடுத்துச்செல்வதற்கும் கண்காணிப்பதற்கும் இலங்கை உட்கருதுகின்றதாதலாலும்:

அத்துடன் உலகளாவிய விருப்புநிலை மட்டத்தினால் வழிகாட்டப்பட்டு ஆனால் தேசிய நலனையும் சூழ்நிலைகளையும் கணக்குக்கெடுத்து மற்றும் அத்தகைய பதினேழு நிலைபெறுதகு அபிவிருத்தி இலட்சியங்களைப் பொருளாதார, சமூக மற்றும் சூழல்சார் துறைகளில் இயைபான நிகழ்வுறு செய்முறைகளில் தேசியத் திட்டமிடற் செய்முறைகளிலும், கொள்கைகளிலும் செயல்நுணுக்கங்களிலும் கூட்டிணைப்பதற்கு இலங்கை அதன் சொந்தத் தேசிய இலக்குகளை நிலைநாட்டுமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2017ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்-

(அ) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும் இச்சட்டத்தின் 11ஆம் பிரிவுக்கிணங்கத் தயாரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும் அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் அமுலாக்குவதற்குமான சட்டக் கட்டுக்கோப்பை வழங்குதலும்

(ஆ) இயற்கையான, சமூக மற்றும் பொருளாதார வளங்களின் சூழியற்சார் ரீதியில் வினைத்திறனான பயன்பாட்டை உறுதிப்படுத்துதல்

(இ) அரசாங்கத்தினால் எல்லா முடிபுகளும் செய்யப்படுவதில் சூழல்சார், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் ஒன்றிணைவை மேம்படுத்தலும் அவற்றின் சமநிலையைப் பேணுதலும் அத்துடன்

(ஈ) இப்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளுக்கிணங்கச் செயல்நுணுக்கங்களை வகுத்தமைத்தல்.

## பாகம் I

## நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையைத் தாபித்தல்

3. (1) (இதனகத்துப் பின்னர் “பேரவை” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவை எனவழைக்கப்படுவதுமான பேரவையொன்று இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, இப்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் அத்துடன் அத்தகைய பெயரினால் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

4. (1) பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள்:-

(i) சனாதிபதியின் செயலாளர்;

(ii) நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(iii) தேசியத் திட்டமிடல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iv) சூழல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏனைய எட்டு உறுப்பினர்கள்:-

(i) அவரது சுயஉந்துதலின் பேரில் அவரினால் நியமிக்கப்படும் இரு உறுப்பினர்கள்;

(ii) பிரதம அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்;

(iii) நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் அத்துடன்

(iv) மாகாணசபைகளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒன்பது ஆட்களிலிருந்து மூன்று உறுப்பினர்கள் இவ்வுட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவுறுவதன்மேல், மாகாண சபைகளினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எஞ்சியுள்ள எண்ணிக்கையினரான ஆட்கள், சுழற்சி முறையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது நியமனத்துக்குக் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் மாகாணசபை சம்பந்தப்பட்ட கருமமொன்று பேரவையின் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கென எடுக்கப்படும் பட்சத்தில், அத்தகைய மாகாணசபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் அத்தகைய கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் தவிசாளர் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளையும் விஞ்ஞானத்தில், பொருளியலில், சூழல் விஞ்ஞானத்தில் அல்லது சமூக விஞ்ஞானத்தில் பரந்த அனுபவத்தையும் கொண்டிருத்தலும், நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பாகக் குறிப்பிட்ட அனுபவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ஐ)ஆம் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின் மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகாலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ஐ)ஆம் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இறப்பின் மூலம், பதவிவிலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(6) சனாதிபதி, எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுதல் உசிதமானதெனக் கருதினால், அதற்கான காரணங்களைக் குறித்தளித்த பின்னர் அவர் அவ்வாறு அகற்றலாம்.

(7) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அப்பொருள்பட சனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு பதிவஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(8) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் இறப்பின் மூலம், பதவி விலகுகையின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகையின் மூலம் அவரது பதவி வறிதாகும் பட்சத்தில், சனாதிபதி, (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறெவரேனுமாளை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம், இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக, மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்குத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் சனாதிபதிக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய தகவலைப் பெற்றதன்மீது, (1) உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

5. (1) பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பேரவையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின் நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) பேரவையானது, ஒவ்வோராண்டிலும் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவை அதன் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின் மூலம் முடிபு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், தமது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக, அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது, பேரவையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

6. பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பேரவையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது பேரவையின் உறுப்பினரொருவரினது நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

7. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் பேரவையின் உறுப்பினர்களுக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

8. நான்காம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் பின்வருமாறிருப்பின் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்-

(அ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால்

(ஆ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவரென அல்லது பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்டிருந்தால்

(இ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(ஈ) அவர், ஒழுக்கக்கேட்டை உட்படுத்துவதும் ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்

(உ) அவர், இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால் அல்லது

(ஊ) அவர், பேரவையின் உறுப்பினரென்றமுறையில் தமது பணிகளை அவர் நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டவராகவிருந்தால்.

9. (1) பேரவையின் இலச்சினை, பேரவையானது காலத்துக்குக்காலம் முடிபுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் இலச்சினை, பேரவை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பேரவையின் இலச்சினை, பேரவையின் வலுவளிப்புடனும் பேரவையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலும் அன்றி, ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) பேரவையின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைப் பேரவை பேணுதல் வேண்டும்.

10. பேரவையின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேசக் கடமைப்பாடுகளை எய்துவதனை வசதிப்படுத்துதல்;

(ஆ) எல்லாத் தோதான திறத்தவர்களினதும் ஒன்பது மாகாணசபைகளினதும் கலந்தாலோசனையுடனும் ஒருப்பாட்டுடனும் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் வகுத்தமைத்தலும் அங்கீகாரத்துக்காக அமைச்சரவை முன்னர் இடுதலும்

(இ) அமைச்சரவை அவ்வாறு முடிபுசெய்கின்றவாறும் செய்கின்றபோதும் காலத்துக்குக்காலம் நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல் நுணுக்கத்தையும் பரிசீலனை செய்தலும் நாளதுவரையாக்குதலும்

(ஈ) புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சுக்கள், மாகாணசபைகள் மற்றும் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளுக்கு நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான வழிகாட்டு நெறிகளை வழங்குதல்

(உ) அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையினதும் செயல்நுணுக்கத்தினதும் அமுலாக்குதலின் வழிமுறைகளையும் முன்னேற்றப் பரிசீலனைச் செய்முறைகளையும் வசதிப்படுத்துதலும் கண்காணித்தலும்

(ஊ) குறிப்பிட்ட ஏதேனும் கருமத்தை ஆராய்வதற்காக நிபுணர்கள் குழுக்களை நியமித்தல்

(எ) நிலைபெறுதகு அபிவிருத்தி நியமங்களையும் சூழலியல்சார் குறிப்புக்காட்டிகளையும் அடையாளங்காணுதல்

(ஏ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, புத்தாக்கம், கல்வி விழிப்புணர்ச்சி மற்றும் வறுமையொழிப்பு என்பன உட்பட நிலைபெறுதகு அபிவிருத்தியை மேம்படுத்துதல்

(ஐ) நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான வழிமுறைகளையும், கணக்காய்வு வழிமுறைகளையும் மற்றெல்லாக் கருமங்களையும் அடையாளங்காணுதலும், அறிமுகப்படுத்துதலும், மேலெடுத்துச்செல்லுதலும்

(ஒ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும், வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும்

(ஓ) ஏதேனும் அரச வங்கியில் நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளைத் திறத்தலும், பேணுதலும், மூடுதலும்

(ஔ) இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் ஏற்றுக்கொள்ளுதல்:

ஆயின், பேரவையானது, பேரவைக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகளும் கொடைகளும் அல்லது நன்கொடைகளும் தொடர்பில், தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். அத்தகைய எழுத்திலான அங்கீகாரம் ஏதேனும் கடப்பாட்டை அல்லது நிபந்தனையை விதித்தலாகாது

(க) பதினேழு நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்குக் கருத்திட்ட அங்கீகார முகவராண்மைகளுடன் ஒருங்கிணைதல்

(ங) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் அல்லது புரிதல் அத்துடன்

(ச) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனாகப் பெறுதல்.

## பாகம் II

### நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும்

11\. (1) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும், நிலைபெறுதகு அபிவிருத்தி இலட்சியங்களுடனும் இணைந்துள்ள இலக்குகளுடனும் இசைந்தொழுகவிருத்தல் வேண்டும்.

(2) நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும் 2030ஆம் ஆண்டு வரை வலுவிலுள்ளதாக விருத்தல் வேண்டும்.

(3) பேரவையானது, நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் சனாதிபதிக்கும் அமைச்சருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும் அமைச்சர் அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும், அவற்றுக்கான ஏதேனும் திருத்தமுட்பட, வர்த்தமானியில் வெளியிடச்செய்தல் வேண்டும்.

(4) அமைச்சர், அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும் அத்தகைய அங்கீகார மறுப்புத் தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்மேல், அத்தகைய நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையும் செயல்நுணுக்கமும், நிலைபெறுதகு அபிவிருத்திமீதான தேசியக் கொள்கையாகவும் செயல்நுணுக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

(7) நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கைக்கும் செயல்நுணுக்கத்துக்கும் இணங்கியொழுகுதல் ஒவ்வோர் அமைச்சினதும், திணைக்களத்தினதும், மாகாணசபையினதும், மாகாண அமைச்சினதும் மற்றும் திணைக்களத்தினதும் ஏதேனும் உள்ளூரதிகாரசபையினதும் கடமையாதல் வேண்டும்.

(8) நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையையும் செயல் நுணுக்கத்தையும் அமுலாக்குகின்ற நோக்கத்துக்காக அமைச்சா் ஏனைய கருத்திட்ட அங்கீகார முகவராண்மைகளுடன் ஒருங்கிணைதல் வேண்டும்.

12. (1) ஒவ்வோா் அமைச்சும், ஒவ்வொரு திணைக்களமும், மாகாண சபையும், மாகாண அமைச்சும் மற்றும் திணைக்களமும், ஒவ்வோா் உள்ளூரதிகாரசபையும், பாராளுமன்றத்தினால் 11ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரத் தேதியிலிருந்து ஓராண்டுக்காலப்பகுதியினுள் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கைக்கும் செயல்நுணுக்கத்துக்கும் இணங்க, அத்தகைய அமைச்சினதும் திணைக்களத்தினதும் மாகாண சபையினதும் மாகாண அமைச்சு மற்றும் திணைக்களத்தினதும் உள்ளூரதிகாரசபையினதும் பரப்பெல்லைக்கு தோதான நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்கத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஒவ்வோா் அமைச்சும், ஒவ்வொரு திணைக்களமும், மாகாணசபையும், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களமும் ஒவ்வோா் உள்ளூரதிகாரசபையும் அமைச்சரினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான காலப்பகுதியினுள் (1)ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்கம் மீதான முன்னேற்ற அறிக்கையொன்றைச் சமா்ப்பித்தல் வேண்டும்.

13. ஒவ்வோா் அமைச்சும், ஒவ்வொரு திணைக்களமும், மாகாணசபையும், மாகாண அமைச்சு மற்றும் திணைக்களமும், ஒவ்வோா் உள்ளூரதிகாரசபையும்-

(அ) புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள்மீது சூழல்சாா் மற்றும் சமூகக் கணக்காய்வு செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் அத்துடன்

(ஆ) புதிய அபிவிருத்தித் திட்டங்கள் மீது சூழல்சாா் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

14. அமைச்சு, திணைக்களம், மாகாணசபை, மாகாண அமைச்சு மற்றும் திணைக்களம் மற்றும் உள்ளூரதிகாரசபை ஒவ்வொன்றினதும் வருடாந்த அறிக்கை, நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையுடனும் செயல்நுணுக்கத்துடனும் இணங்கியொழுகியமை பற்றிய கூற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

## பாகம் III

### பேரவையின் பணியாட்டொகுதி

15. (1) பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருக்க வேண்டியவரும், அதன் பணிப்பாளா் தலைமையதிபதியாகவிருக்க வேண்டியவருமான ஆளொருவா் அமைச்சரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் சமுகமளிப்பதற்கும் அத்தகைய கூட்டங்களில் உரையாற்றுவதற்கும் பணிப்பாளா் தலைமையதிபதி உரித்துடையவராதல் வேண்டும் ஆனால் அத்தகைய எவையேனும் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) பேரவையானது, வினைத்திறனான தொழிற்பாட்டுக்குத் தேவைப்பட்ட குறைந்தபட்சப் பணியாட்டொகுதியினா் பற்றிய தேவைப்பாட்டை மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன், சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானவாறான அத்தகைய வேறு அலுவலா்களையும் சேவையாளா்களையும் நியமித்தலும் வேண்டும்.

(4) பணிப்பாளா் தலைமையதிபதி, பேரவையின் பொதுவான பணிப்புக்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பேரவையின் அலுவலா்களினதும் சேவையாளா்களினதும் நிருவாகக் கட்டுப்பாடு உட்பட, பேரவையின் எல்லா அலுவலா்களையும் நடாத்துவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) அமைச்சரவையினால் தீா்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் பணிப்பாளா் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) அமைச்சரவை, (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளா் தலைமையதிபதியை அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாம்.

16. பணிப்பாளா் தலைமையதிபதி, சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு இயலாதவராகவிருக்கும் போதெல்லாம், அமைச்சா், பேரவையின் ஒருப்பாட்டுடன், அத்தகைய வராமையின்போது அவரினிடத்திற் செயலாற்றுவதற்குப் பேரவையின் வேறெவரேனும் சிரேட்ட அலுவலரை நியமிக்கலாம்.

17. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலா், அவ்வலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், பேரவையினால் தீா்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலா் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவா் தொடா்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலா் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவா் தொடா்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளைப் பேரவை தொழிலுக்கமா்த்துமிடத்து, அவ்வாளினால் பேரவைக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

18. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் மற்றும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவின் சம்மதத்துடன், பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும் சம்பந்தப்பட்ட பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பேரவையின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அவ்வலுவலரின் அல்லது சேவையாளரின் மற்றும் அவ்வுயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடன், பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) விடயத்துக்கேற்ப, (1)ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள், பேரவையினது பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

19. (1) பேரவையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவையின் கணக்குகளினது கணக்காய்வு தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

20. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் ஐஐஇன் ஏற்பாடுகள், பேரவையின் நிதிக்கட்டுப்பாட்டுக்கும் மற்றும் கணக்குகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

21. (1) பேரவையானது, எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களுள், பணிகளுள் அல்லது கடமைகளுள் எவற்றையும் பேரவையின் தவிசாளருக்கு அல்லது உறுப்பினருக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாமென்பதுடன், தவிசாளர் அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி, பேரவையினால் வழங்கப்பட்ட எவையேனும் விசேடமான அல்லது பொதுவான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், பேரவையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

22. இச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை அமைச்சர் காலத்துக்குக்காலம் பேரவைக்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் பேரவையின் கடமையாதலும் வேண்டும்.

23. பேரவையின் எல்லா உறுப்பினர்களும், பேரவையின் அலுவலர்களும், சேவையாளர்களும், முகவர்களும், (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் பொருளுக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

24. பேரவையானது (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் பொருளுக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்டவொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

25. (1) பேரவையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்திற்கு முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் பேரவையின் உறுப்பினரொருவரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால், பேரவையின் எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

26. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, குறிப்பாகப் பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளுக்கு வழிகாட்டுநெறிகளை வழங்குதல்

(ஆ) நிலைபெறுதகு அபிவிருத்திச் செயல்நுணுக்க அமுலாக்கல்மீது கண்காணிப்பு வழிமுறைகளும் முன்னேற்றப் பரிசீலனைச் செய்முறைகளும்

(இ) நிலைபெறுதகுதன்மை நியமங்களும் சூழலியல்சார் ரீதியில் குறிப்புக்காட்டிகளும்;

(ஈ) கருத்திட்டங்களை எண்ணிடுவதற்கான அல்லது அளவிடுவதற்கான வழிமுறைகள்

(உ) தோதான சமூக மற்றும் சூழல்சார் கணக்காய்வுகளை நிறைவேற்றுவதற்கான கட்டளைக்கற்கள்

(ஊ) அபிவிருத்திக் கருத்திட்டங்களினதும் பின்னிப்பிணைந்த கருத்திட்டங்களினதும் வகுதிகள் அத்துடன்

(எ) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளினால் கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்வதற்கான வழிமுறைகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றபின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதகாலப்பகுதியினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

27. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய:-

"அமைச்சர்" என்பது, நிலைபெறுதகு அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்

"கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகள்" என்பது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகள், மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூரதிகாரசபைகள் அத்துடன் வேறெல்லா அரசாங்க மற்றும் மாகாணசபை முகவராண்மைகள் என்பவற்றை உள்ளடக்கும்

"நிலைபெறுதகுதன்மை" என்பது, திட்டவட்டமின்றிப் பேணப்படுவதற்கு ஒரு பொருளின், நடவடிக்கையின், செயற்பாட்டின் அல்லது செய்முறையின் ஆற்றல் என்று பொருளாகும்: அத்துடன்

"நிலைபெறுதகு அபிவிருத்தி" என்பது, எதிர்காலச் சந்ததியினர் தமது சொந்தத் தேவைகளுக்கு முகங்கொடுப்பதற்கு அவர்களுக்குள்ள இயலுமாந்தன்மையைப் பாதிப்படையவிடாது தற்போதைய தேவைகளுக்கு முகங்கொடுக்கின்ற அபிவிருத்தி என்று பொருளாகும்.

28. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2017ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 19ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் விரிவுப்பெயர், "காப்புறுதிச் சபையொன்றைத் தாபிப்பதற்கும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலும் "இலங்கைக் காப்புறுதிச் சபை" அத்துடன் (இலங்கைக் காப்புறுதிச் சபையைக் குறிக்கும்) "சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே, "இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" அத்துடன் "ஆணைக்குழு" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "இலங்கைக் காப்புறுதிச் சபை" என்பது பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் "இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்பதைப் பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "ஒன்றில் ஒரு வகுப்பினதான அல்லது இரு வகுப்பினவையுமான காப்புறுதித் தொழிலைக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொதுக் காப்புறுதித் தொழிலை அல்லது நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 15ஆ, 15இ மற்றும் 15ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

15ஆ. பிரிவு 15அ வின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு-

(அ) இலங்கைக்கு வெளியேயுள்ள பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் மீது நிரற்படுத்தப்படவேண்டியதும், அத்தகைய பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, உலகப் பரிவர்த்தனைகள் சம்மேளனத்தின் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட

அத்தகைய வேறு ஒழுங்கமைப்பின் உறுப்பினரொருவராக இருக்கின்றதுமான வெளிநாட்டுக் கொளிக் கம்பெனியொன்றினால் உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனியின் பங்குகளினது குறைந்தபட்சம் எண்பத்தைந்து சதவீதமேனும் வைத்திருக்கப்படுகின்றதெனவும்;

(ஆ) அத்தகைய உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனியின் கணக்குகள், வெளிநாட்டுக் கொளிக் கம்பெனியின் தொகுதித் திரட்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளனவெனவும்; அத்துடன்

(இ) உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனியின் கணக்குகள் தொடர்பிலான தேவைப்பாடு உட்பட, வெளிநாட்டுப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் எல்லா ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கும் தொகுதி மட்ட இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய வெளிநாட்டுக் கொளிக் காப்புறுதிக் கம்பெனி எந்த வெளிநாட்டுப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படுகின்றதோ அந்த வெளிநாட்டுப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையினால் சட்டப்படி தேவைப்படுத்தப்படுகின்றதெனவும்,

திருப்திப்படுவதன்மேல், 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்படுவதிலிருந்து அத்தகைய உள்நாட்டுத் துணைநிலை காப்புறுதிக் கம்பெனியை விலக்களித்தல் வேண்டும்.

15இ. (1) இரண்டாயிரத்தாறாம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் மீது நிரற்படுத்தப்படுவதிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பனியொன்று 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் மீது நிரற்படுத்தப்பட்டுள்ள கம்பெனியொன்றினால் வைத்திருக்கப்படுகின்றதெனத் திருப்திப்படுவதன்மேல், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் மீது நிரற்படுத்துவதிலிருந்து அத்தகைய உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனியை விலக்களித்தல் வேண்டும்.

(3) (அ) வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இரு தனிவேறான கம்பெனிகளாகப் பிரிக்கப்படுவதன்மேல் அமைக்கப்படும் எவையேனும் காப்புறுதிக் கம்பெனிகள், அத்தகைய பிரித்தல் இடம்பெறும் திகதியன்று அத்தகைய கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்பட்ட பெயர்கள் எவ்வாறிருப்பினும், 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றின்மீது நிரற்படுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இரு தனி வேறான கம்பெனிகளாகப் பிரிக்கப்படுவதன் மேல் அமைக்கப்பட்ட எவையேனும் காப்புறுதிக் கம்பெனிகள் இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டாலொழிய, அத்தகைய விலக்களிப்பெதுவும் செல்லுபடியாதலாகாது.

15ஈ. காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான எவையேனும் நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுதல் -

(அ) ஏதேனும் வெளிநாட்டுக் கொளிக் கம்பெனியின் ஏதேனும் உள்நாட்டுத் துணை நிலைக் காப்புறுதிக் கம்பெனியின்;

(ஆ) 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் 15இ என்னும் பிரிவின் (2)ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உருவகங்களின்,

கடமையாதல் வேண்டும்."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(5) (அ) ஆளெவரும், வேறொரு தரகரின் அல்லது காப்புறுதியாளரொருவரின் காப்புறுதி முகவரொருவராக ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய ஆள் தரகரொருவரின் காப்புறுதி முகவரொருவராக நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது.

(ஆ) ஆளெவரும், தரகரொருவரின் காப்புறுதி முகவரொருவராக ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய ஆள் காப்புறுதியாளரொருவரின் காப்புறுதி முகவரொருவராக நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது.

(இ) ஆளெவரும், குறிப்பிடப்பட்டவொரு வகுப்பினதான காப்புறுதித் தொழிலுக்காக வேறொரு காப்புறுதியாளரொருவரின் காப்புறுதி முகவரொருவராக ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய ஆள், அதே வகுப்பினதான காப்புறுதித் தொழிலுக்காகக் காப்புறுதியாளரொருவரின் காப்புறுதி முகவரொருவராக நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது."

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 114ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "காப்புறுதித் தொழிலின் வகுப்புகள்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"காப்புறுதித் தொழிலின் வகுப்பு" என்பது, பொதுக் காப்புறுதித் தொழில் அல்லது நீண்டகாலக் காப்புறுதித்தொழில் என்று பொருள்படும்,

"வெளிநாட்டுக் கொளிக் கம்பெனி" என்பது, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்பட்டதும், உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனியொன்றின் கொளிக் கம்பெனியொன்றாக உள்ளதுமான ஏதேனும் கம்பெனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;" அத்துடன்

(2) "உள்ளூர் அதிகாரசபைப் பிணைப்பொறுப்பு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனி" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கையில் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்குப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் என்று பொருள்படுமென்பதுடன், இச்சட்டத்தின் 113(2) ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட கம்பெனியொன்றையும் உள்ளடக்கும்;".

8\. (1) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளனவாகவிருக்கும் இலங்கைக் காப்புறுதிச் சபையின் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அத்துடன் வேறு சாசனங்கள் அனைத்தும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாக, உடன்படிக்கைகளாக அல்லது வேறு சாசனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கைக் காப்புறுதிச் சபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும் வேறு சட்ட நடவடிக்கைகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட துடர்ச்சிகளாகவும், வழக்குகளாகவும் வேறு சட்ட நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இலங்கைக் காப்புறுதிச் சபையின் எல்லா உரிமைகளும், பொறுப்புகளும், கட்டுப்பாடுகளும், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உரிமைகளாகவும், பொறுப்புகளாகவும், கட்டுப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான நாளன்று இலங்கைக் காப்புறுதிச் சபைக்குரித்தாக்கப்பட்ட எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களும், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தால், இலங்கைக் காப்புறுதிச் சபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பு ஒவ்வொன்றும், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம்.

9\. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, "இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு", எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட "இலங்கைக் காப்புறுதிச் சபையை" அடுத்துறுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

10\. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

11\. இச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகள், 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 53ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பிரித்தல் தேவைப்பாடுகளை அவ்வாறு தேவைப்படுமிடத்து நிறைவேற்றிய பின்னர், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவின்கீழ் 2011ஆம் ஆண்டு பெப்புருவரி 7ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்றை வைத்திருக்கின்ற ஏதேனும் வெளிநாட்டுக் கொளிக் கம்பெனியின் ஏதேனும் உள்நாட்டுத் துணைநிலைக் காப்புறுதிக் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

# 2017 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஏனைய சட்டவாக்கங்கள

1. 2017ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சி (திருத்தச்) சட்டம்
2. 2017ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்
3. 2017ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்
4. 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
5. 2017ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்
6. 2017ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்